DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 4

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. நாகராஜன் |
| Father's Name | : | சுப்பையா |
| Village | : | நாகர்கோவில் (கிருஷ்ணன்கோவில்) |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | - |
| Calling | : | ஆட்டோ டிரைவர் |
| Religion | : | இந்து |
| Age | : | 56 |
| Date | : | 07.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.06.2024

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

07.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது கிருஷ்ணன் கோவில் மேலத் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுகிறேன். 28.08.2023 அன்று இரவு 11.00 மணிக்கு அறுகுவிளை சவாரி போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்போது தெப்பக்குளத்தின் தென்மேற்கு பக்கம் காவல் வேன் நின்றது. லைட் வெளிச்சம் இருந்தது. காவல் ஆய்வாளர் வரைபடம் ஒன்று போட்டுக் கொண்டிருந்தார். நான் பார்த்துக் கொண்டிருந்தேன் அப்போது அங்கே கீழே வெள்ளை செருப்பு ஒரு ஜோடியும், நீலக் கலர் செருப்பு ஒரு ஜோடியும், அதைக் கைப்பற்றினார். ஒரு பேப்பரில் அதை எழுதினார். அதில் நான்

கையொப்பம் செய்தேன். என்னுடன் இன்னொரு பையனும் கையொப்பம் செய்தார். அவரை எனக்கு தெரியாது. இரண்டு தாளில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அப்போது கைப்பற்றிய செருப்புகளை அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 6 மற்றும் 7 செருப்புகள் அந்த செருப்புகள் தான். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். 100 மீட்டருக்குள் இருக்கும். எத்தனை ஆட்டோக்கள் நிற்கும் என்றால் 10 ஆட்டோக்கள் நிற்கும். அதற்கு அருகே டிம்போ நிற்கும் என்றால் சரியல்ல. தெப்பகுளத்திற்கு வலது பக்கம் நாகம்மாள் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த குளத்தின் அருகே ஆட்டோ ஸ்டாண்ட் மற்றும் டிம்போ ஸ்டாண்ட் உள்ளது என்றால் ஆட்டோ ஸ்டாண்ட் மட்டும் உள்ளது பகலில் மட்டும் நிற்கும். வடசேரி காவல் நிலையம் இருக்கும் பகுதி மிக நெருக்கமாக இருக்கும் பகுதி என்றாலும் அந்த பகுதியில் சுமார் 1000 வீடு இருக்கும் என்றாலும் சரிதான். வடசேரி காவல் நிலையத்தின் எதிரே இரண்டு, மூன்று ஆட்டோக்கள் நிற்கும் என்றால் சரியல்ல அங்கே ஆட்டோ நிற்காது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து J.K. மருத்துவமனை 150 மீட்டர் இருக்கும். அது Multispeciality மருத்துவமனை என்றால் சரிதான். A.K. மருத்துவமனை அங்குதான் உள்ளது என்றால் கோவிலுக்கு எதிரே உள்ளது. அதுவும் Multispeciality மருத்துவமனைதான் என்றால் சரியல்ல. J.K. மருத்துவமனை அருகில் ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றாலும் நிறைய ஆட்டோ உள்ளது என்றாலும் சரிதான். SSD பாத்திரக் கடை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் உள்ளது SSD பாத்திரக் கடையிலிருந்து சத்தம் போட்டுக் கூப்பிட்டால்

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து கேட்கும் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன எழுதியிலிருந்தது என்றால் தெரியும். நான் அன்றைய தினம் ஆட்டோவில் வந்தேனா, நடந்து வந்தேனா என்றால் சவாரிக்கு சென்று திரும்பி வந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திலிருந்து அவசரத்திற்கு அங்கிருந்து ஆட்டோ கிடைக்கும் என்றால் சரியல்ல வடசேரி பஸ் ஸ்டாண்ட்ற்கு தான் வர வேண்டும். J.K. மருத்துவமனைக்கு அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்ட்டும் 150 மீட்டருக்குள் தான் இருக்கும் என்றால் சரிதான். அங்கே ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது. ஆனால் பகலில் மட்டும்தான் இருக்கும். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் அங்கு இரவு 12 மணிக்கு ஆட்டோ நிற்கும் என்றாலும் சரியல்ல. ஆட்டோ இரவில் நிற்காது. நான் சொல்வது போல சொன்ன இடத்தில் வைத்து எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.